Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.No.264/2023, Cr.No.808/2020, Kandili PS.
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.6, Page.No.

| | |
|---|---|
| பெயர் | சாந்தி |
| வயது | 46 |
| தந்தை | ஜான் சின்னத்தம்பி |
| தொழில் | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | திருப்பத்தூர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 08th day of May 2026.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>.- (1ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் தற்போது சென்னை வடக்கு மண்டல C1 பூக்கடை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 29.07.2020 அன்று கந்திலி காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது, மண்டலநாயனகுண்டா கிராம நிர்வாக அலுவலர் திரு.மணிகண்டன் நிலையம் ஆஜராகி அளித்த புகாரினைப் பெற்று 17.00 மணியளவில் கந்திலி காவல் நிலையக் குற்ற எண்.808/2020, இதச பிரிவுகள் 294(b), 353–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினமே 18.00 மணியளவில் சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் கெங்கையன் மற்றும் சென்னையன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4–**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 41–A சம்மன் சார்வு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 353–ன் கீழ் 30.07.2020 அன்று இறுதியறிக்கையை பதிவு செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

தினேஷ் குமார் என்பவர் எந்த தேதியில் டவரின் மீது ஏறி போராட்டம் செய்தார் என்றால் 27.07.2020. மேற்படி விவரங்கள் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவயிடமானது தனி நபருக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். அளவு கற்களை பிடுங்கியதாக உள்ள நிலையில் மாதிரி வரைபடத்தில் அது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் முதலானோர் சம்பவத்தை தடுத்ததாக உள்ள நிலையில் அவர்கள் பணியிலிருந்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தினேஷ்குமார் டவரில் இருந்தபோது, SP, DSP ஆகியோர் அங்கு வந்தார்கள் என்றால் சரிதான். தினேஷ்குமார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி பிரச்சனை குறித்து திருப்பத்தூர் தாசில்தார் அலுவலகத்தில் அமைதி பேச்சுவார்த்தை நடந்தது என்றால் சரிதான். அப்போது எதிரிகள், தாசில்தாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் தாங்கள் இல்லாத போது நிலத்தில் ஏன் கற்களை நட்டீர்கள் என்று தாசில்தாரிடம் முறையிட்டனர் என்றால் சரிதான். மேற்படி புகாரும் தாசில்தார் அலுவலகத்தில் தான் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், தினேஷ்குமார் டவரில் ஏறியது சமூக வலைதளங்களில் பரவி பேசு பொருளாக ஆனதால் அதை மறைப்பதற்காக மேற்படி புகார் அளிக்கப்பட்டது என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Judicial Magistrate No.II,
Tirupathur.